தரம் - 05 மாணவர்களுக்கு நடாத்தப்படும்
புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை - 2021

பெயர்:..... **செ.பகீரதன்** (MA, BA, PGDE, Na.Dip.Teach, Dip.in.Counseling) **SLTS 1**

வினாத்தாள் **12** பகுதி 2 - கணிதம் நேரம் 1.30 மணி

@ எல்லாவினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.

01. ஓர் அரியத்திற்கு எத்தனை விளிம்புகள் உள்ளன?

.....

02. 5 மீற்றர் 25 சென்றி மீற்றரை சென்ரி மீற்றரில் எழுதுக?

.....

03. 2671 - 1384 = ... கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.

.....

04. 2kg மாவின் விலை ரூபாய் 260.00 எனின் 500g மாவின் விலை யாது?

.....

05. அடைப்பினுள் தரப்பட்டுள்ள எண்களை கொண்டு ஆக்கக்கூடிய சிறிய எண்ணிற்கும் மிகப்பெரிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது? | 1 5 8 7 |

.....

06. பன்னிரண்டாவது ஒற்றை எண் யாது?

.....

07. ஒரு கம்பியினால் செய்யப்பட்ட சதுரத்தின் சுற்றிய அளவு $48m$ எனின் அக்கம்பியை விரித்து செய்யப்படும் முக்கோணி ஒன்றின் ஒரு பக்க நீளம் யாது?

.....

08. பி.ப 12.30 மணியை 24 மணித்தியால கடிகார நேரத்தில் எழுதுக.


.....

09.  இவ்வுருவில் உள்ள விளிம்புகள் எத்தனை?.....

10. ஒவ்வொன்றும் 180g நிறையுடைய 20 தேயிலைப் பைக்கற்றுக்களின் நிறை யாது?

.....

www.lkedu.lk

11. 

இவ்வுருவில் சரியாக அரைப்பங்கை நிழற்ற இன்னும் எத்தனை கட்டங்கள் நிழற்றப்பட வேண்டும்?

.....

12. தொலைக்காட்சி ஒன்றை வாங்கிய ஒருவர் ஒரு வருடத்தின் பின் வாங்கிய விலையில் $1/4$ பங்கை குறைத்து விற்றார். அவர் வாங்கிய விலை ரூபாய் 84200.00 எனின் அவர் விற்ற விலை யாது?

.....

13. 3 மீற்றர் கயிற்றில் 72 சென்ரிமீற்றர் கொண்ட மூன்று சம துண்டுகள் வெட்னால் ஒரு துண்டின் நீளம் யாது?.

.....

14. 1 - 30 வரையுள்ள இலக்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?

.....

15. **1/2kg** வாழைப்பழத்தில் 8 காய்கள் இருக்கும் எனின் 40 வாழைப்பழம் தேவைப்படும் ஒருவர் எத்தனை **kg** வாழைப்பழம் வாங்க வேண்டும்?.

.....

16. **9kg** சீனியிலிருந்து **3kg 500g** சீனியை எடுத்தால் மீதியுள்ள சீனியின் நிறை யாது?

.....

17. 100 இன் அரைவாசியுடன் 50 ஐக் கூட்டி 40 ஐக் கழித்தால் வரும் விடை என்ன?

.....

18. பேருந்து ஒன்று ஒரு மணித்தியாலத்தில் 70km வேகத்தில் சென்றால் அது 5 மணித்தியாலம் 30 நிமிடத்தில் சென்ற தூரம் எவ்வளவு?

.....

19. ரூபாய் 25.50 இல் எத்தனை 50 சத நாணயங்கள் உண்டு ?

.....

20. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு ஆகும். ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 963 எனின் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

21. பி.ப 6.00 இந்த நேரத்தின் 6 மணித்தியாலத்திற்கு பிந்திய நேரம் யாது?

.....

22. மு.ப 6.45 க்கு பாடசாலை செல்ல வீட்டில் இருந்து புறப்பட்ட கிஷானி மீண்டும் பி.ப 12.45 க்கு வீட்டை அடைந்தாள். எனின் அவள் வெளியே செலவளித்த நேரம் எவ்வளவு?

.....

23. ஒரு தொழிற்சாலையில் 5 நாட்களில் உற்பத்தி செய்த ஆடைகளின் எண்ணிக்கை 24500 ஆகும். அதில் 12800 ஆடைகள் விற்கப்பட்டன. எனின் எஞ்சிய ஆடைகளின் எண்ணிக்கை யாது?

.....

24. ஒரு பிள்ளைக்கு 8 இனிப்புக்கள் வீதம் 168 இனிப்புக்களை எத்தனை பிள்ளைகளுக்கு கொடுக்க முடியும்

.....

25. 6 கிலோமீற்றர் 50 மீற்றரை மீற்றரில் எழுதுக?

.....

26. ஒரு வருடத்தில் எத்தனை வாரங்கள் உண்டு?

.....

27. பின்வரும் எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக?

1, 4, 9, 16 ,25 ,....., ...

28. ஒரு பெட்டியில் 12 பென்சில்கள் வீதம் 148 பென்சில்களை எத்தனை பெட்டிகளில் அடுக்கலாம்?

.....

29. ரூபாய் 35.00 இல் எத்தனை 25 சதங்கள் உள்ளன?

.....

30. பொது வித்தியாசம் 9 ஐக் கொண்ட எண்கோலம் ஒன்றை உருவாக்குக

12 , ..., ... , ……..

31. சாதாரண வருடமொன்றின் தை மாதம் 1 ஆம் திகதி திங்கட்கிழமை எனின் அவ்வருடத்தின் நடுநாள் எத்தனையாவது நாள் ?

.....

www.lkedu.lk

32. ஒரு வீட்டில் உள்ள அங்கத்தவர்களின் மொத்த வருமானம் ரூபாய் 48000.00 ஆகும். அதில் உணவுக்காக ¼ பங்கை செலவு செய்த பின் எஞ்சியதில் அரை பங்கை சேமிக்கின்றனர். அவர்கள் சேமிக்கும் தொகை யாது?

.....

33. முதல் நாள் 1587 தேங்காய்களும் இரண்டாம் நாள் 846 தேங்காய்களும் உரிக்கப்பட்டன. உரிக்கப்பட்ட மொத்தத் தேங்காய்கள் எத்தனை?

.....

34. மேற்குத் திசைக்கும் வடக்குத் திசைக்கும் இடையே உள்ள திசையின் எதிர்த்திசை யாது?

.....

35. சந்தோஸ் தன்னிடம் இருந்த ரூபாய் 2000.00 இல் இருந்து ரூபாய் 1140.50 இற்கு புத்தகமொன்றை வாங்கியபின் அவனிடம் உள்ள மீதிப்பணம் எவ்வளவு?

.....

36. ஒரு தேங்காயின் விலை ரூபாய் 80.00 ஆகும். ரூபாய் 3200.00 ஐக் கொண்டு எத்தனை தேங்காய்கள் வாங்கலாம்?

.....

37. 5 மீற்றர் நீளமான கயிற்றின் 20 சென்றி மீற்றர் நீளமான 6 துண்டுகள் வெட்டப்பட்டன. மீதி உள்ள கயிற்றின் நீளம் யாது?

.....

38.  எத்தனை சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட தளவடிவம் எது?

.....

39. பின்வரும் எண்களை கொண்டு ஆக்கப்படும் நான்கிலக்க மிகச்சிறிய எண்ணை எழுத்துக்கிளில் எழுதுக? | 5 , 8 , 1 , 0 , 4 |

.....

40. இலங்கையில் புழக்கத்தில் உள்ள நாணயத்தாள்களில் கையொப்பம் இடுபவர்கள் யார்?

.....

(40 x 2.5 = 100 புள்ளிகள்)

www.lkedu.lk